

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் அணிச் செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில், தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி முன்னிலையில் அத்திவாக்கம் சுன்னத் ஜமாஅத் ஜாமியா மஸ்ஜித், பள்ளிப்பேட்டை மஸ்ஜிதே முகமது இப்ராஹிம் பள்ளிவாசல், மஸ்ஜிதே வாலாஜா ஜாமிஆ மஸ்ஜித் சுன்னத் ஜமாஅத் – கடப்பேரி பள்ளிவாசல், டவுன் ஜாமிஆ மஸ்ஜித், மஸ்ஜித் வாலாஜா – கடப்பேரி, நவாப் ஜாமிஆ மஸ்ஜித்– கருங்குழி, ஜாமிஆ மஸ்ஜித் – படாளம், ஜாமிஆ மஸ்ஜித்–சூனாம்பேடு முதலிய பள்ளிவாசல் நிர்வாகிகளை சந்தித்து கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு ஆதரவாக வாக்குகளை சேகரித்தனர்.

உச்சநீதிமன்றத்தில்
தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிரான வழக்கு!

சென்னை, செப். 30 –

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து, சுதந்திரமான விசாரணை கோரி உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் சைலேந்திர மணி திரிபாதி தாக்கல் செய்துள்ள இந்த மனுவில், SIR நடவடிக்கையின் போது, தேர்தல் ஆணையம் மேற்கொண்ட தன்னிச்சையான மென்பொருள் மாற்றங்களை சட்டவிரோதமானது என அறிவிக்க வேண்டும் என்றும்,

இந்த முறைகேடுகள் குறித்து உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் சுதந்திரமான சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்து விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்றும் மனுதாரர் கோரியுள்ளார். இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிரான வழக்கை அடுத்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக தெரிவித்தனர்.

வாக்களித்த மை காய்வதற்குள் கட்சி மாறிய

த.வெ.க. வேட்பாளரின் துரோகத்திற்கு பாடம் புகட்டுவீர்!

மதுராந்தகத்தில் பிரேமலதா விஜயகாந்த் பிரச்சாரம்!

சென்னை, செப். 30 –

மதுராந்தகம் சட்டமன்ற தனி தொகுதி இடைத்தேர்தல் அக்டோபர் 6ம் தேதி நடைபெற உள்ளது. தி.மு.க. சார்பில் வழக்கறிஞர் இ.பரந்தாமன் போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா நேற்று நெல்வாய் ஜங்ஷன் பகுதியில் திறந்த ஜீப்பில் நின்றபடி வாக்கு சேகரித்தார்.

அங்கு பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது:

இந்த தொகுதியில் இடைத்தேர்தல் வருவதற்கு காரணம் துரோகம். துரோகம் செய்தவர்களால் இந்த தேர்தல் வந்தது. வாக்களித்த மக்களின் விரல்களில் மை காய்வதற்குள் மக்களுக்கு துரோகம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? துரோகத்திற்கு மதுராந்தகம் தொகுதி மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

எந்த கட்சிக்காரர்கள் உழைத்து உங்களை வெற்றி பெற செய்தார்களோ அந்த கட்சிக்கு துரோகம் செய்து விட்டீர்கள். துரோகம் செய்தவர்களுக்கு தமிழ்நாட்டில் இடம் இல்லை என்பதை மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மதுராந்தகம் விவசாயம் நிறைந்த பகுதி. இங்கு பெரும்பாலான விவசாயிகள் நெற்பயிர் விவசாயம் செய்கின்றனர். விவசாயம் செய்த நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. இதனால்



விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். 100 நாள் வேலை திட்டம் இந்த பகுதியில் முறையாக வழங்கப்படுவதில்லை. அதற்கான கூலியும் முறையாக வழங்கப்படவில்லை.

முதியோர் பென்ஷன் நிறுத்தப்பட்டாச்சு. முதலமைச்சராக இருந்தபோது மு.க.ஸ்டாலின் ரூ.1000 வழங்கினார். ஆனால் முதல்வர் விஜய் ரூ.2500 தேர்தல் வாக்குறுதி கொடுத்தார். அதை அவரால் நிறைவேற்ற முடிந்ததா? தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வரை திமுகவுடன் இணைந்து நாங்கள் மிகப் பெரிய போராட்டத்தை நடத்த உள்ளோம்.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை!

பெண்களுக்கு பாதுகாப்பு இங்கே இருக்கிறதா, விவசாயம் இருக்கா, வேலைவாய்ப்பு இருக்கா, குடிநீர் இருக்கா என்று பொதுமக்களை பார்த்து கேள்வி எழுப்பினால் பொதுமக்கள் இல்லை என பதில் அளிக்கின்றனர். இதே மதுராந்தகம் தொகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருக்கிறார். அக்கா, தங்கை என்று சொல்கிறீர்களே. அந்த அக்கா, தங்கைகளுக்கு முழு பாதுகாப்பு கொடுக்கிறீர்களா? தேர்தலில் நிறைய வாக்குறுதிகள் கொடுத்தீர்கள். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றினீர்களா? மின் கட்டணமும், விலைவாசியும்தான் உயர்ந்தது.

தமிழ்நாட்டில் தற்பொழுது போதை பழக்கம் அதிகரித்துள்ளது. பாதுகாப்பற்ற தமிழ்நாடு. எங்கு பார்த்தாலும் கற்பழிப்பு, பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் தமிழ்நாடு சுடுகாடாக மாறி உள்ளது. என்ன மாற்றத்தை தமிழ்நாட்டில் பார்த்தோம், ஏமாற்றத்தை மட்டுமே பார்த்தோம். எந்த மாற்றமும் கிடையாது. இருக்கவே இருக்காரு எங்க தம்பி ஆதவ் அர்ஜுன். அவர் வாயைத் திறந்தாலே சண்டைதான். சட்டமன்றத்திலேயே நான் சொன்னேன், சட்டசபையா இல்லை, சண்டை சபையா என்று சொன்னேன். மக்களுடைய பிரச்னையை பேச வேண்டிய சட்டசபையில் தி.மு.க. மீது உள்ள காழ்ப்புணர்ச்சி இந்த சட்டசபையில் பேசுகிறீர்கள் என்றேன்.

ஆதவ் அர்ஜுனா பதவி விலக நேரிடும்!

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி இந்த பகுதியில் பிரச்சாரம் செய்தார். அதே நேரத்தில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனும் பிரசாரம் செய்தார். நுணலும் தன் வாயால் கெடும் என்பதற்கேற்ப மதுராந்தகம் தொகுதியில் தவெக தோற்றுவிட்டால் நான் பொதுச் செயலாளர் பதவியை ராஜினாமா செய்கிறேன். அதேபோல், உங்களால் செய்ய முடியுமா என்று சவால் விட்டு சென்று இருக்கிறார்.

இந்த சவாலை மக்கள் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர் விட்ட சவாலுக்கு நீங்கள்தான் இந்த தேர்தலில் திமுகவிற்கு வாக்களித்து பதிலடி கொடுக்க வேண்டும். இந்த மதுராந்தகம் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியான வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். மதுராந்தகத்தில் திமுக வெற்றி பெற்று, ஆதவ் அர்ஜுனா கட்சிப் பதவி விலக வேண்டிய நிலை வரும். தவளை தன் வாயால் கெடும் என்பதுபோல ஆதவ் அர்ஜுனா பேசியுள்ளார்.

இவ்வாறு அவர் பேசினார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(28.09.2026)

ஆதனக்கோட்டையில் இரு சமூகத்தினர் இடையே மோதல்!




புதுக்கோட்டை மாவட்டம் - கந்தர்வக் கோட்டை அருகே ஆதனக்கோட்டையில் நடைபெற்ற சட்ட விழிப்புணர்வு கூட்டத்தில் இரு பிரிவினர் இடையே மோதல் - பதற்றம்.

கொலை மிரட்டல் விடுத்தவர்களை கைது செய்யக்கோரி பட்டியல் சமூகத்தை சேர்ந்த பொதுமக்கள் சாலை மறியல் போராட்டம்.

வாகனங்களை சேதப்படுத்தியதுடன் பட்டியலின மக்களுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குற்றச்சாட்டு.

கொரடாச்சேரியில் காவல்துறையினரைக் கண்டித்து தீக்குளிக்க முயற்சி!



திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், காவல்துறையினரைக் கண்டித்து வனராஜன் என்பவர் தீக்குளிக்க முயற்சி .

பொது இடத்தில் வேட்டியை அவிழ்த்து போலீசார் மானபங்கப்படுத்தியதாகவும், தொடர்ந்து பொய் வழக்கு போடுவதாகவும் வனராஜன் குற்றச்சாட்டு.

சில ஆண்டுகளுக்கு முன்பு கஞ்சா விற்பனை செய்த தன்னை, தற்போது போலீசார் அடிக்கடி விசாரணைக்கு அழைப்பதாக வனராஜன் புகார்.

சம்மந்தம் இல்லாத வேறு வழக்குகளில் ஆஜராகுமாறு காவல்துறையினர் தன்னை கட்டாயப்படுத்துவதாகவும் வனராஜன் குற்றச்சாட்டு.

மதுரையில் விஜய்க்காக காத்திருந்தவர்களுக்கு வாந்தி, மயக்கம்!

மதுரையில், விஜய்க்காக காலையில் இருந்து காத்திருந்தவர்களில் 15க்கும் மேற்பட்டோருக்கு வாந்தி, மயக்கம் .

குடிக்க தண்ணீர் இல்லாமல், கொளுத்தும் வெயிலில் தவியாய் தவித்து காத்திருந்து மயங்கி விழுந்ததால் பரபரப்பு.

விஜய்யின் பாதுகாப்பு வாகனங்கள் சாலையை மறித்து நிறுத்தியதால், அரசு ராஜாஜி மருத்துவமனை நோயாளிகள், மக்கள் அவதி.

தண்ணீர் இல்லாமல் தவித்த பொதுமக்கள், கிடைத்த குடிநீர் பாட்டில்களை போட்டிப்போட்டுக் கொண்டு வாங்கியதால் தள்ளுமுள்ளு.

தலைவிரித்தாடும் லஞ்சம்! அரசு மருத்துவமனை அவலங்கள்!

மாற்றம் தருவோம் என்று மக்களிடத்தில் பொய் சொல்லி ஆட்சிக்கு வந்த சோபா மாடல் த.வெ.க. ஆட்சியில் லஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது

சென்னை ராயபுரம் ஆர்.எஸ்.ஆர்.எம் அரசு மருத்துவமனையில் நோயாளிகளிடம் லஞ்சம் கேட்டு ஊழியர்கள் தொல்லை.

குழந்தை பிறப்புக்காக வரும் தாய்மார்களை வீல் சேரில் அழைத்துச் செல்வது முதல் பரிசோதனைகள் வரை ஊழியர்களுக்கு லஞ்சம் கேட்கும் அவலம்.

குழந்தை பிறந்தவுடனே கேக்குற பணத்தைக் கொடுத்தால்தான், குழந்தையையே கண்ணில் காட்டுவதாக குற்றச்சாட்டு.

மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளை உறவினர்கள் பார்ப்பதற்குக் கூட ஊழியர்கள் பணம் கேட்டு தொல்லை.

தங்க மோதிரம் திட்டத்தை தொடங்கி வைக்க அமைச்சர் மாரியவில்சன் வருகைக்காக தாய்மார்கள் மணிக்கணக்கில் காக்கவைப்பு.

மேகமலை போராட்ட களத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயற்சி!



மேகமலைக் கிராம மக்களின் தொடர் காத்திருக்கும் போராட்ட களத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றவரால் பரபரப்பு.

கடமலைக்குண்டு கிராமத்தைச் சேர்ந்த இராமர், வருசநாடு மக்களை

வெளியேற்றும் நடவடிக்கையை கைவிட வலியுறுத்தி தற்கொலை முயற்சி.

வன ஆக்கிரமிப்பாளர்கள் என்று வெளியேற்றும் உச்சநீதிமன்ற உத்தரவை

கைவிடக் கோரி மேகமலை மலைக் கிராம மக்கள் 3வது நாளாக காத்திருப்பு போராட்டம்.

விவசாயிகளை பாதுகாக்க உச்ச நீதிமன்ற உத்தரவை எதிர்த்து

த.வெ.க. அரசு சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் என மேகமலை கிராம மக்கள் வலியுறுத்தல்.

மதுபோதையில் தாயை கொலை செய்த மகன்!



கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் அருகே தங்கலீலா என்பவரை அவரது மகன் மதுபோதையில் கழுத்தை நெரித்துக் கொலை .

தங்கலீலா படுக்கையில் பிணமாகக் கிடந்ததைப் பார்த்து மகள் ஜாஸ்மின் ஷீபா அதிர்ச்சி .

தாயை சகோதரர் தாக்கிக் கொலை செய்ததாக சகோதரி ஜாஸ்மின் ஷீபா காவல்நிலையத்தில் புகார்.

தங்கலீலாவின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பிய போலீசார் கொலைக்கான காரணம் குறித்து விசாரணை.

போலி ரசீதுகள் மூலம் மாபெரும் பகல் கொள்ளை!

போலி ரசீதுகள் மூலம் த.வெ.க. ஆட்சியில் நடைபெறும் மாபெரும் பகல் கொள்ளை அம்பலம்!

போலி ரசீதுகளை அதிகாரிகளே வழங்கிவிட்டு லாரிகளை பறிமுதல் செய்வதா என கனிமவளத்துறையின் நாடகத்தை தோலுரித்த மணல் லாரி உரிமையாளர்கள்!



ரசீது அச்சடித்த குவாரி உரிமையாளர்களை தப்பிக்க விட்டு அப்பாவி லாரி ஓட்டுநர்களை தண்டிப்பது தான் த.வெ.க. ஆட்சியின் லட்சணமா? என சரமாரி கேள்வி!

வழக்கு பதிவு செய்து 10 நாட்களாகியும் முறைகேட்டில் ஈடுபட்ட குவாரி ஒப்பந்ததாரரை இதுவரை கைது செய்யாதது ஏன்? போலீசாரிடம் லாரி உரிமையாளர்கள் புகார்!


தி.மு.க. ஆட்சியில் 8,000 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு லோடு மணல், இன்றைய த.வெ.க. ஆட்சியில் 11,000 ரூபாயாக கிடுகிடு உயர்வு!

அப்பாவி ஓட்டுநர்கள் மீது போடப்பட்ட வழக்கை ரத்து செய்து, பறிமுதல் செய்யப்பட்ட 14 லாரிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என எச்சரிக்கை!

ஒப்பந்ததாரர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் த.வெ.க. அரசுக்கு எதிராக மாபெரும் போராட்டம் வெடிக்கும் என மணல் லாரி உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பு!

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மடுவை அ.துரை
செப்டம்பர் 30 (2020)



தனது இளமைப் பருவம் தொட்டே கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

தென்சென்னை மாவட்டம், சைதை பகுதிக் கழகச் செயலாளராகவும், பகுதி அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மயிலை மேற்கு பகுதி

121 (அ) வட்டக் கழகச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 30 –

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 121(அ) வட்டக் கழக செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நேற்று (28.09.2026 - திங்கட்கிழமை) பிற்பகல் 1:15 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை மறைந்த சீ.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குடும்பத்திற்கு தெரிவித்துள்ளார்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி

இ.பரந்தாமனை ஆதரித்து தீவிரப் பிரச்சாரம்!

தொ.மு.ச. இரா.பொன்னுராம் தலைமையில்
சு.பத்மநாபன் முன்னிலையில் வாக்கு சேகரித்தனர்!

மதுராந்தகம், செப். 30 –

தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை தலைவர்,கி. நடராசன், பொதுச்செயலாளர் மு.சண்முகம், பொருளாளர் கோசி. வள்ளுவன் ஆகியோரின் ஆணைக்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழிகாட்டுதலின்படி மதுராந்தகம் சட்டமன்ற வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் மருத்துவமனை சாலையில் தொ.மு.ச. பேரவை துணைத்தலைவர் இரா.பொன்னுராம் தலைமையில் பேரவை செயலாளர் சு.பத்மநாபன்,

செங்கல்பட்டு மாவட்ட பேரவை கவுன்சில் செயலாளர் பெப்ஸி கண்ணன், போக்குவரத்துக் கழக காஞ்சிபுரம் மண்டல தொ.மு.ச. பொதுச்செயலாளர் க.ரவி, ஒன்றிய துணை செயலாளர் க.செல்வராசு. அமைப்பு சாரா தொ.மு.ச. பொருளாளர் சசிக்குமார், தலைவர் சி.கு.ராஜா, ஏ.ஆறுமுகம் வாக்கு சேகரித்தனர்.

இதில் போக்குவரத்து தொ.மு.ச. நிர்வாகிகள் முரளி, தனசேகரன், ராசேந்திரன், ராசா, கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. வி.ராசேந்திரன், பொதுச்செயலாளர்கள் காஞ்சிபுரம் வி.சந்திரசேகர், டியுசிஎஸ். ராஜன், சாமிநாதன், சென்னை சிந்தாமணி அலிசன், செங்கல்பட்டு கார்த்திக்குமார், நிர்வாகிகள் பிரபாகரன், கதிரவன், கோகுல்ராஜ், சுரேசன், முத்துச்செல்வன், ஜான்சன், பிரீத்தா, பார்த்தீபன், தமிழ்ச்செல்வன், தாமு, அய்யனார், ஞாவேல், அரிதாஸ், வி.ரவி, பாலாஜி, மதன், சுகுமார், லோகநாதன், வேலு, சந்திரபிகாஷ், சுரேஷ்குமார், புஷ்பவல்லி, மேகலா, பாலாமணி மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தார்கள்.